இந்த மொழிபெயர்க்கப்பட்ட திட்டத் தரவுத் தாள் (PDS) 25 ஏப்பிரல் 2016 திகதியிடப்பட்ட அதன் ஆங்கிலப் பதிப்பினை அடிப்படையாகக் கொண்டது.

ADB ASIAN DEVELOPMENT BANK

# இலங்கை: யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி நீர் வழங்கல் திட்டம் - மேலதிக நிதியிடல்

| | |
|---|---|
| திட்டத்தின் பெயர் | யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி நீர் வழங்கல் திட்டம் - மேலதிக நிதியிடல் |
| திட்ட இலக்கம் | 37378-014 |
| நாடு | இலங்கை |
| திட்டத்தின் நிலை | முன்மொழியப்பட்டது |
| திட்ட வகை/ உதவி நடைமுறை | கடன்<br>தொழில்நுட்ப உதவி |
| நிதியிடல் மூலம்/ தொகை | **கடன்: யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி நீர் வழங்கல் திட்டம் - மேலதிக நிதியிடல்**<br>ஆசிய அபிவிருத்தி நிதியம் — அமெரிக்க டொலர் $25.00 மில்லியன்<br>சாதாரண மூலதன வளங்கள் — அமெரிக்க டொலர் $95.00 மில்லியன்<br>**தொழில்நுட்ப உதவி: யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி நீர் வழங்கல் திட்டம் - மேலதிக நிதியிடல்**<br>தொழில்நுட்ப உதவி விசேட நிதி — அமெரிக்க டொலர் $600,000.00 |
| மூலோபாய செயற்பட்டியல் | சூழலியல்சார் நிலையான வளர்ச்சி<br>உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சி |
| மாற்றத்திற்கான இயக்கிகள் | ஆளுகை மற்றும் திறன் மேம்பாடு |
| துறை / உபதுறை | **நீர் மற்றும் பிற நகர உட்கட்டுமானம் மற்றும் சேவைகள்** - நகர நீர் வழங்கல் |
| பாலின சமத்துவம் மற்றும் பெருவோட்டத்தில் இணைதல் | செயலூக்கமான பாலின பெருவோட்ட இணைவு |
| விவரணம் | ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) யாழ்பாணம் மற்றும் கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் சுகாதாரத் திட்டதிற்கு நவம்பர் 2010 இல் ஒப்புதல் அளித்து இருந்தது. இலங்கையின் வடக்கின் பெரும் பகுதியில் உள்ள யாழ்பாணக் குடாநாடு, பல தசாப்தகால மோதல்களினால் மோசமாகப் பாதிக்கப்பட்டதுடன் பொருளாதாரத்தில் பின்தங்கிய பிராந்தியமாக உள்ளது. |

| | |
|---|---|
| | இந்தத் திட்டம் பிராந்தியத்தில் மோதலுக்குப் பின்னரான அபிவிருத்தி மற்றும் நல்லிணக்கத்திற்கு ஆதரவளிக்கும் ஒரு அபிவிருத்திப் பங்குதாரரின் ஒரு முதல் முயற்சியாக இருந்தது. இத்திட்டம் யாழ்பாணக் குடாநாட்டிலிருந்து 50 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள இரணைமடுவிலிருந்து நாளொன்றிற்கு அண்ணளவாக 27,000 கன மீற்றர்கள் ($m^3$/நாள்) நீரினை, நீர் பற்றாக்குறை நிலவும் யாழ்ப்பாணம் மற்றும் அருகிலுள்ள நகரங்களுக்கு கொண்டுசெல்லவும், சுத்திகரிப்பதற்கும் குடிநீர் விநியோகிப்பதற்கும், இலக்கினைக் கொண்டிருக்கின்றது. இது யாழ்ப்பாண நகரத்தில் சுகாதாரம்சார் உட்கட்டுமானங்களை மேம்படுத்துவது மற்றும் குடாநாட்டில் நீர் வளங்களை முகாமைத்துவம் செய்வதனையும் இலக்காகக் கொண்டுள்ளது.<br><br>இத் திட்டம் குறிக்கத்தக்களவு தொடக்கப் பின்னடைவுகளுக்கு உட்பட்டதனால் அமுலாக்கத் தாமதங்கள் மற்றும் செலவு மிகையுறல்கள் விளைவாகின. இத் திட்டம், கடன் மதிப்பீட்டுக் கட்டத்தில் நீர் பகிர்வுக்கு உள்ளூர் விவசாயிகள் உடன்பட்டிருந்த போதிலும், இரணைமடு குளத்தின் நீரினை குடிநீர் நோக்கங்களுக்காகப் பயன்படுத்துவதற்கு எதிராக அவர்களின் போராட்டங்களின் காரணமாக தாமதம் அடைந்திருந்தது. முரண்பாடுகளின் ஒரு விளைவாக, குறைமதிப்பீடு ஏற்பட்டு திட்டத்தின் குறித்த விடாமுயற்சிக்கு முட்டுக்கட்டையாக அமைந்தது. மேலும், முரண்பாடு மற்றும் தொலைவுப் புவியியல் அமைவிடம் காரணமாக, திட்டத்தின் செயற்படுத்தற் திறன்கள் பலவீனமாக இருந்தன.<br><br>திட்டத்தின் நடைமுறைப்படுத்தலை மேம்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கம் ஒன்றுபட்ட பிரயத்தனத்தை மேற்கொண்டிருந்தது. விரிவான கலந்துரையாடல்கள் மற்றும் சுற்றுச்சூழல் மதிப்பீடு உள்ளடங்களாக பல்வேறு தெரிவுகளின் மதிப்பாய்வுகளின் பின்னர், தலைகீழ் சவ்வூடுபரவல் முலம் உவர்ப்பு நீக்குதல் செயல்முறை மூலம் கடல் நீரில் இருந்து குடிநீர் தயாரித்தல் முலம் யாழ்ப்பாணத்தின் அவசர குடிநீர்த் தேவையைச் சந்தித்தல் ஒரு அவசியமான இடைக்காலத் தீர்வாக இனங்காணப்பட்டிருந்தது. கடல்நீர் சுத்திகரிப்பு ஆலை அமைத்தலிற்கு நிதியிடுதல் மற்றும் செலவு மிகையுறலை ஈடுசெய்தலிற்கு மேலதிக நிதியிடல் என்பவற்றிற்காக இத் திட்டம் தற்போது மறுசீரமைக்கப்பட வேண்டி உள்ளது. அரசாங்கம் இத் திட்டத்தினை மறுசீரமைப்பதற்கும் மேலதிக நிதியிடல் நடவடிக்கைகளுக்குமாக ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு ஒரு கோரிக்கைக் கடிதத்தினை அனுப்பியிருக்கின்றது. |
| திட்டத்தின் காரண விளக்கமும் நாடு/ பிராந்திய மூலோபயத்திற்கான தொடர்பும் | 2009 இல் மோதல் முடிவுக்கு வந்ததன் பின்னர், யாழ்ப்பாணம் துரித நகரமயமாக்கலை அனுபவிப்பதுடன், 2030 அளவில் சனத்தொகை வளர்ச்சி தற்போதைய 600,000 இலிருந்து 900,000 ஆக வளருமென எதிர்பார்க்கப்படுகிறது. வருடாந்த மழை வீழ்ச்சி 1,200 மில்லி மீற்றர் (மிமீ) அளவில் இருக்கின்றபோதும், யாழ்ப்பாணத்தின் மேற்பரப்பு நீர் வளங்கள் வரையறுக்கப்பட்டதாக இருக்கின்றது. குடாநாடு குடிநீர் மற்றும் பிரதான பொருளாதார நடவடிக்கையான விவசாயத்திற்கு நிலத்தடி நீரில் தங்கியுள்ளது. எவ்வாறாயினும், நிலக்கீழ் நீர்ப்படுக்கை மிகை உறிஞ்சுதலால் ஆபத்தை எதிர்கொண்டு, கடல் நீர் உட்புகுதல் மற்றும் உயர் உவர்த் தன்மை ஏற்படுதல், சில இடங்களில் லீற்றருக்கு 3,000 மில்லி கிராம் (மிகி/லீ) வரை, போன்றவற்றிற்கு வழி ஏற்படுத்துகிறது.<br><br>நிலத்தடி நீராலோ அல்லது உள்ளூர் நிலமேற்பரப்பு நீராலோ யாழ்ப்பாணத்தின் குடிநீருக்கான உடனடித் தேவையை நிவர்த்திசெய்ய முடியாது. பல்வேறு தெரிவுகளை ஆராய்ந்த ஒரு சாத்தியக்கூற்று ஆய்வு ஒரு சாத்தியமான இடைக்கால நீர் வழங்கும் மூலமாக கடல்நீர் சுத்திகரிப்பு |

| | |
|---|---|
| | ஆலை அமைப்பதனை மட்டுமே பரிந்துரை செய்திருந்தது.<br><br>கடல்நீர் சுத்திகரிப்பு ஆலை அமைத்தல் ஒரு விலையுயர்ந்த தெரிவு என்பதால், 300,000 மக்களுக்கு மட்டுமே குடிநீர் வழங்கப் போதுமானது. யாழ்பாணத்தின் முழு சனத்தொகைக்குமான தேவையை பூர்த்தி செய்வதற்கு மேற்பரப்பு நீரினை வடிகட்டும் முனைப்புகள் மற்றும் பிற முன்னெடுப்புகளுடன் இது இணைக்கப்பட வேண்டியிருக்கின்றது. இது குடிநீர் நோக்கங்களுக்காக குளத்து நீர் பகிர்விற்கு இரணைமடு விவசாயிகளை இசைய வைக்கும் தொடர் முனைப்புகள்; இரணைமடு குளத்தின் கொள்திறனை அதிகரித்தல்; நீர் வள முகாமைத்துவத்தை மேம்படுத்துதல்; நீர் சேமிப்பினை ஊக்குவித்தல் மற்றும் நிலத்தடி நீர்ப்படுக்கைகளின் புத்துயிர்ப்பு; மற்றும் விவசாயிகளிடம் பரிந்து பேசும் முயற்சிகளைத் தொடர்தல் என்பவற்றை உள்ளடக்கும். நீர் வள முகாமைத்துவத்திற்கு ஒரு நீண்ட கால ஒருங்கிணைந்த அணுகுமுறை மேலதிக நிதியிடலில் அவசியமானதாக இருக்கும். |
| தாக்கம் | நடைமுறைத் திட்டம்:<br><br>யாழ்ப்பாணக் குடாநாட்டில் நகரப் பிரதேசங்களில் சுகாதாரம் மற்றும் மனித மேம்பாடு மேம்படுத்தப்படுதல் (மகிந்த சிந்தனை).<br><br>ஒட்டுமொத்தத் திட்டம்:<br><br>மாற்றமடையவில்லை |
| விளைவு | நடைமுறைத் திட்டம்:<br><br>இலக்கு வைக்கப்பட்ட நகரப் பகுதிகளில் குடியிருப்பாளர்கள் மற்றும் உள்ளக இடம்பெயர்வுகளின் பின்னர் திரும்புகின்ற நபர்களுக்கான நீர் வழங்கல் மற்றும் சுகாதாரம்சார் உட்கட்டுமானம், மற்றும் யாழ்ப்பாணக் குடாநாட்டின் நீர் வளங்களின் மேம்படுத்தப்பட்ட பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவம் மேம்படுத்தப்படல்.<br><br>ஒட்டுமொத்தத் திட்டம்:<br><br>யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள இலக்கு வைக்கப்பட்ட நகர்ப்புறப் பகுதிகளில் பாதுகாப்பான குடிநீருக்கான அணுகல் மேம்படுத்தப்பட்டிருத்தல். |
| விளைபொருட்கள் | நீர் வழங்கல் சேவை உட்கட்டுமானம் மேம்படுத்தப்பட்டிருத்தல்.<br><br>நடைமுறைத் திட்டம்:<br><br>சுகாதாரம்சார் உட்கட்டுமானம் மேம்படுத்தப்பட்டிருத்தல்<br><br>ஒட்டுமொத்தத் திட்டம்:<br><br>இரணைமடுக் குளத்தின் வசதி மேம்படுத்தப்பட்டிருத்தல்<br><br>நடைமுறைத் திட்டம்:<br><br>யாழ்ப்பாணக் குடாநாட்டில் நீர் வளங்கள் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவம் |

வலுவூட்டப்பட்டிருத்தல்.

ஒட்டுமொத்தத் திட்டம்:

மாற்றமடையவில்லை

நடைமுறைத் திட்டம்:

திட்ட முகாமைத்துவம் மற்றும் செயல்படுத்தல் அமைப்பு செயற்படு நிலையில் உள்ளது.

ஒட்டுமொத்தத் திட்டம்:

தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் யாழ்ப்பாண பிராந்திய அலுவலகத்தின் நிறுவனத் திறன் பலப்படுத்தப்பட்டிருக்கின்றது.

புவியியல் அமைவிடம்

**பாதுகாப்பு வகைகள்**

| | |
|---|---|
| சுற்றுச்சூழல் | A |
| தன்னிச்சையற்ற மீள்குடியேற்றம் | B |
| சுதேச மக்கள் | C |

**சுற்றுச்சூழல் மற்றும் சமுதாயம் சார்ந்த பார்வைகளின் சுருக்கம்**

சுற்றுச்சூழல்சார்ந்த பார்வைகள்

தன்னிச்சையற்ற மீள்குடியேற்றம்

சுதேச மக்கள்

**பங்குதாரர் தொடர்பாடல், பங்குபற்றல், மற்றும் ஆலோசனை**

திட்ட வடிவமைப்பின் போது

திட்ட அமுலாக்கத்தின் போது

**வியாபார வாய்ப்புக்கள்**

| | |
|---|---|
| ஆலோசனைச் சேவைகள் | திட்ட முகாமைத்துவ ஆலோசகர்களின் ஆட்சேர்ப்பு (சமூகத் தாக்க மதிப்பீட்டினை நடாத்துவதற்கு சமூகப் பாதுகாப்பச் சிறப்பு நிபுணர்கள் உட்பட) |
| கொள்வனவு | கடல்நீர் சுத்திகரிப்பு ஆலை ஒப்படைப்பதற்கு ஒரு நிர்மாணித்து- செயற்படுத்தும் கொள்வனவு நடைமுறை பயன்படுத்தப்படும். |

**பொறுப்பான பணியாளர் குழாம்**

| | |
|---|---|
| பொறுப்பான ஆசிய அபிவிருத்தி வங்கி அலுவலர் | ஜிங்மின் ஹுவாங்க் |
| பொறுப்பான ஆசிய அபிவிருத்தி வங்கித் திணைக்களம் | தெற்கு ஆசியத் திணைக்களம் |
| பொறுப்பான ஆசிய அபிவிருத்தி வங்கிப் பிரிவு | இலங்கை வதிவிடப் பணிமனை |
| நிறைவேற்று முகவர்கள் | **நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு**<br>“லக்திய மெதுர”, இல. 35, புதிய பாராளுமன்ற வீதி, பெலவத்த<br><br>**மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு**<br>330, யுனியன் இடம், கொழும்பு 02<br>இலங்கை |

**கால அட்டவணை**

| | |
|---|---|
| எண்ணக்கரு அனுமதி | 11 மார்ச் 2016 |
| கருத்து அறிதல் | 22 ஜூன் 2016 முதல் 30 ஜூன் 2016 வரை |
| எம்ஆர்எம் | 18 ஜூலை 2016 |
| ஒப்புதல் | 30 மார்ச் 2017 |
| இறுதி மீளாய்வுப் பணி | - |
| இறுதி பீடீஎஸ் (PDS) மேம்படுத்துகை | 14 மார்ச் 2016 |

திட்டத் தரவுத் தாள்கள் (PDS) திட்டம் அல்லது நிகழ்ச்சித்திட்டத்தின் சுருக்கமான தகவலைக் கொண்டிருக்கின்றன: ஏனெனில், PDS ஆனது ஒரு செயல்நிலையிலுள்ள வேலையாக இருப்பதனால், சில தகவல் இதன் முதற் பதிப்பில் உள்ளடக்கப்படாதிருக்கலாம் ஆனால் அவை கிடைக்கும் போது சேர்க்கப்படும். முன்மொழியப்பட்ட திட்டங்கள் பற்றிய தகவல் தற்காலிகமானதாகவும் குறிப்பானதாகவும் உள்ளது.

ADB இந்தத் தகவல் தரவுத் தாளில் உள்ளடக்கப்பட்டிருக்கும் தகவலை அதன் பயனர்களுக்கு எந்த விதமான உத்தரவாதமும் இல்லாமல் ஒரு வளமாக மட்டும் வழங்குகின்றது. ஆசிய அபிவிருத்தி வங்கி உயர் தரமான உள்ளடக்கத்தினை வழங்க முயற்சிக்கும் அதே நேரத்தில், வெளிப்படையாகவோ அல்லது மறைமுகமாகவோ வியாபார உத்தரவாத வரையறைகள் இல்லாமை உட்பட, எந்த வகையான உத்தரவாதமும் இல்லாமல் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்குப் பொருந்துமாறு உள்ளபடி வழங்குகின்றது. ஆசிய அபிவிருத்தி வங்கி குறிப்பாக, அவ்வாறான எந்தத் தகவலினதும் துல்லியம் மற்றும் பூரணத்துவம் பற்றி எந்தவித உத்தரவாதங்களையோ அல்லது பிரதிநிதித்துவங்களையோ மேற்கொள்ளவில்லை.